OS 203/2017
வா.சா.2 அரசு த/பெ எட்டியப்பன்
நாள் 08.07.2025

**குறுக்கு விசாரணை**

1. சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி எனது சொந்தக்காரர் அவர் அழைத்ததால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் எந்த பத்திரத்தில் கையொப்பம் போட்டேன் என்றால் அடமானப்பத்திரத்தில் கையொப்பம் போட்டேன். என்னுடன் யார் கையொப்பம் செய்தது என்றால் ஆரணியை சேர்ந்த சீனிவாசன் கையொப்பம் செய்தார். பத்திரம் எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் 12.00 மணியிலிருந்து 01.00 மணிக்குள் பதிவு செய்யப்பட்டது. நான் போகும் போது தயார் செய்யப்பட்டதா அல்லது ஏற்கனவே தயார் செய்யப்பட்டிருந்ததா என்றால் ஏற்கனவே தயார் செய்யப்பட்டிருந்தது நான் கையொப்பம் செய்தேன். யார் பத்திரத்தை தயார் செய்தது என்றால் ரமேஷ் என்பவர் தயார் செய்தார். நான் பத்திரத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. பத்திரத்தில் உள்ள சொத்து விவரம் தெரியுமா என்றால் ஆரணியை சார்ந்த காந்தி ரோடு சொத்து ஆகும். மேற்படி சொத்து சம்மந்தமாக ஏற்கனவே ஒரு ஒப்பந்தம் போடப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. கிரைய அக்ரிமெண்டில் 13 லட்சம் கிரையத்தொகை பேசி 3 லட்சம் அட்வாண்ஸ் கொடுக்கப்பட்டதாக விவரம் உள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 10.01.2007ல் கிரைய ஒப்பந்த பத்திரம் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தம் ஒரு சில காரணங்களுக்காக நிறுத்தப்பட்டு அதன்பிறகு தான் அடமானப்பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 10.01.2007 தேதியிட்ட கிரைய ஒப்பந்தபடி அளிக்கப்பட்ட ரூ.3,00,000/-ற்கு வட்டி சேர்த்து தான் அடமானப்பத்திரம் எழுதப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அடமானப்பத்திரத்திற்கு ஈடாக கடன் எதுவும் வழங்கவில்லை என்றால் இல்லை பணம் கொடுத்தார்கள். பணம் எங்கு வைத்து கொடுத்தார்கள் என்றால் ரிஜிஸ்டர் ஆபிசில் கொடுத்தார்கள். நான் பணத்தை எண்ணி பார்த்தேனா என்றால் இல்லை. நான் 2வது ஆக சாட்சி கையொப்பம் செய்திருக்கிறேன். முதல் சாட்சி கையொப்பம் யார் போட்டது என்றால் சீனிவாசன் போட்டார். சீனிவாசனை விசாரித்தால் என்ன நடந்தது என்று தெரியவரும் என்றால் தெரியவரும்.

3. அடமானப்பத்திரம் எப்போது எழுதப்பட்டது என்றால் 11.12.2009ல் எழுதப்பட்டது. எனது திருமண நாள் தெரியுமா என்றால் 16.09.1996 ஆகும். 2016 என்று சொல்லிவிட்டு 1996 என்று சொல்கிறார். அடமானப்பத்திரத்தை படித்து பார்த்து விட்டு சாட்சி சொல்கிறேன் என்றால் இல்லை. வாதி என்னை வற்புறுத்தி அழைத்து வந்து சாட்சி சொல்ல வைத்திருக்கிறார் என்றால் இல்லை. எத்தனை கையெழுத்துகள் போட்டேன் என்றால் ஒரே கையெழுத்து போட்டேன். ரிஜிஸ்டர் ஆபிசிஸ் எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் பத்திரத்தில் ஒரு கையெழுத்தும் ரிஜிஸ்டர் ஆபிசிஸ்ல் ஒரு கையெழுத்தும் போட்டேன். என்ன நடந்தது என்று விவரம் தெரியாது என்றாலும் கையொப்பம் போட்டுவிட்டு சென்றுவிட்டேன் என்றாலும் அடமானப்பத்திரத்திற்கு பிரதிவாதி பணம் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. பத்திரம் 2 மணி முதல் 3 மணி வரை பதிவாகி உள்ளது என்றாலும் நான் 12 மணி முதல் 1 மணி வரை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.